**ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்குதல்**

**வாசிக்க**: 1**கொரிந்தியர்** 12:1-11

1. ஞானமாகிய வரம்: மக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு காரணம் என்ன என்பதை அறிந்து, அதற்காக உண்மையான (சரியான) தீர்வை கொடுப்பது. மற்றும் மக்கள் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? எங்கு செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்? என்பதை தெளிவாக கற்றுகொடுக்கும் வரம் தான் ஞானமாகிய வரமாகும். இந்த வரத்தை உடையவர்கள் எந்த சூழலுக்கும், எந்த கேள்விக்கும் ஞானமாய் பதில் கொடுப்பவராக இருப்பார்கள். 2நாளாகமம் 1:7-11, 1கொரிந்தியர் 12:1-13, அப்போஸ்தலர் 6:3,10

2. அறிவாகிய வரம்: வேதவசனத்தின் சத்தியத்தை ஆராய்ந்து, அவைகளை முறையாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் மக்களுக்கு கற்றுகொடுக்கும் வரம் தான் அறிவாகிய வரமாகும். இந்த வரத்தை உடையவர்கள் வசனத்தின் வெளிப்பாடுகளை தேவனிடத்திலிருந்து பெற்று மக்களுக்கு வேதாகம சத்தியத்தை தெளிவாக கற்றுக்கொடுப்பார்கள். 1கொரிந்தியர் 12:1-13, 2கொரிந்தியர் 11:6, கொலோசெயர் 2:2,3.

3. விசுவாசமாகிய வரம்: எந்த விதமான நல்ல அறிகுறி தெரியாமல் இருந்தாலும், தேவன் பேரிலும், அவர் என்ன சொல்கிறாரோ அதை செய்ய உண்மையுள்ளவர் என்பதிலும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருப்பார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களை உறுதியுடன் பற்றிக்கொண்டு அதன் அடிப்படையில் செயல்படுவார்கள். தேவன் கொடுக்கும் தரிசனத்தை செயல்படுத்துவதில் தோல்விகள் ஏற்பட்டாலும் தேவனுடைய நாமத்தினால் தடைகளை மேற்க்கொள்ளும் வரம் தான் விசுவாசமாகிய வரமாகும். இந்த வரத்தை உடையவர்கள் முடியவே முடியாது என்று தோன்றுகிறவைகளைக் கூட மிக எளிதில் தேவனுடைய நாமத்தினாலே செய்து முடிப்பார்கள். 1கொரிந்தியர் 12:9, ரோமர் 4:18-21, எபிரேயர் 11:1-40, மாற்கு 16:17,18

4. குணமாக்குதலின் வரம்: தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியும், இயேசு கிறிஸ்துவே தேவன் என்பதை உறுதிப்படுத்துவார்கள். ஆவி, ஆத்துமா, சரீர சுகத்துக்காக தேவனிடத்திலிருந்து பதில் வரும்வரை ஜெபிக்கும் வரம் தான் குணமாக்குதலின் வரமாகும். 1கொரிந்தியர் 12:9,28,29 அப்போஸ்தலர் 3:1-10, 9:32-35, யாக்கோபு 5:14-16

**கேள்விகள்**:

1. ஞானமாகிய வரம் உடையவர்கள் எப்படிப்பட்டவராக இருப்பார்கள்?

2. அறிவாகிய வரம் உடையவர்கள் எப்படிப்பட்டவராக இருப்பார்கள்?

3. விசுவாசமாகிய வரம் உடையவர்கள் எப்படிப்பட்டவராக இருப்பார்கள்?